**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்.**
**முன்னிலை - திரு. எஸ்.பி.பரத்குமார், M.B.A., L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.**
2026 ம் வருடம் மார்ச் மாதம் 09 ம் நாள் திங்கட்கிழமை
**STC.No.4342/2025**

தமிழக அரசுக்காக,
P. மதுரைவீரன்,
உணவு பாதுகாப்பு அலுவலர் (429),
தமிழ்நாடு உணவு பாதுகாப்பு துறை,
கரூர் மாவட்டம். ... குற்றமுறையீட்டாளர்.

**/எதிர்/**

ஜானகிராமன் (41),
த/பெ. ராமசாமி. ... எதிரி.

இவ்வழக்கானது கடந்த 19.12.2025 ம் தேதி எதிரிக்கு எதிராக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை - II அவர்களும், எதிரி தரப்பில் எதிரி தனக்கு தாமே முன்னிலையாகியும் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீ ர் ப் பு ரை**

இவ்வழக்கின் எதிரி கடையில், கடந்த 19.06.2024 ம் தேதி 964, பஸ்நிலைய ரவுண்டானா, கோவை ரோடு, கரூர் மாவட்டம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீவெங்கடேஸ்வரா நெல்லை லாலா ஸ்வீட்ஸ் & பேக்கரி என்ற எதிரியாகிய ஜானகிராமன் என்பவர் கடையில் சேகரிக்கப்பட்ட ஜின்சர் சிப்ஸ் 24/010/090 & SL.No.53/2024-25 என்ற எண் உடைய உணவு மாதிரி எடுக்கப்பட்டும், 19.06.2024 ம் தேதியன்று உணவு பகுப்பாய்விற்காக மதுரை உணவுப் பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டபோது மேற்படி உணவு பொருள் பாதுகாப்பற்றது (Unsafe) என அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும், மேற்படி எதிரி பாதுகாப்பற்ற உணவு பொருளை பொது மக்களுக்கு மனித உணவாக விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியின் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு 59(i)ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டி தனிப்புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் எதிரி ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரி மீதான குற்றச்சாட்டின் சாராம்சத்தை விளக்கி கூறி வினவப்பட்டபோது எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்தார். எனவே வழக்கானது சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இந்நிலையில், 09.03.2026 ஆகிய இன்று எதிரி ஆஜராகி தான் குற்றத்தை ஒப்புக் கொள்வதாக கூறி குற்ற ஒப்புதல் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

5) எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீதான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு 59(i)-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டு விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

6) முடிவாக எதிரியின் தம்மிச்சையான குற்ற ஒப்புதலை ஏற்றுக் கொண்டும், எதிரி உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு3(1)(zz)யை மீறி உணவு வணிகர்களுக்கான கடமையிலிருந்து தவறியுள்ளதாகவும், எனவே எதிரியின் மீதான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு 59(i)ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு நீதிமன்றம் கலையும்வரை ஒருநாள் சிறைத்தண்டனை விதித்தும் அபராதமாக ரூ.10,000/- விதித்தும், கட்டத் தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் 264 BNSS பிரிவின் கீழ் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ம் நாளாகிய இன்று அவையறிய என்னால் பகரப்பட்டது.

(sd)S.P. பரத்குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**